# Tnpsc Model Question Paper 17 – General Studies in Tamil

Click Here to Download More Tnpsc Model Questions

1. முசிறியை "இந்தியாவின் முதல் பேரங்காடி" என்று கூறும் வெளிநாட்டு நூல் --------- ஆகும்
**(அ) இயற்கை வரலாறு** (ஆ) புவியியல்
(இ) எரித்திரியன் கடலின் பெரிப்ளஸ் (ஈ) புத்த பதிப்புகள் (நாட்குறி புத்தகம்)

2. தவறான இணையைத் தெரிவு செய்க:
(அ) வ.உ.சிதம்பரம் – செப்டம்பர் 5, 1872
**(ஆ) சுப்பிரமணிய பாரதியார் – டிசம்பர் 11, 1881**
(இ) சி.இராஜாஜி – டிசம்பர் 10, 1878
(ஈ) காமராஜர் – ஜீலை 15, 1903

3. கூற்று (A): வேலு நாச்சியார் ஹைதர் அலியிடம் 5000 காலாட்படைகளும், 5000 குதிரைப் படைகளும் அனுப்பும்படி கடிதம் எழுதினார்.
காரணம் (R): வேலு நாச்சியார் ஆங்கிலேயரோடு மோதுவதில் தீவிரமாக இருப்பதைத் தெளிவுபடுத்தினார்.
(அ) கூற்று (A) மற்றும் காரணம் (R) இரண்டும் சரி எனினும் காரணம் (R) கூற்றை (A) சரியாக விளக்கவில்லை
(ஆ) கூற்று (A) மற்றும் காரணம் (R) ஆகிய இரண்டுமே தவறானவை
**(இ) கூற்று (A) மற்றும் காரணம் (R) இரண்டும் சரி காரணம் (R) கூற்றை (A) சரியாகவே விளக்குகிறது**
(ஈ) கூற்று (A) தவறானது, காரணம் (R) சரியானது

4. ஜாலியன் வாலாபாக் படுகொலை பற்றி விசாரிக்க பிரிட்டிஷ் அரசாங்கம் நியமித்த குழுவின் பெயர்
(அ) தார் குழு **(ஆ) ஹன்டர் குழு** (இ) ராய் குழு (ஈ) சைமன் குழு

5. தமிழ் நாட்டின் எந்த இரண்டு மாவட்டங்கள் அடிக்கடி புயலினால் பாதிக்கப்படுகின்றன?
(அ) தேனி மற்றும் மதுரை **(ஆ) நாகப்பட்டினம் மற்றும் கடலூர்**
(இ) விழுப்புரம் மற்றும் பெரம்பலூர் (ஈ) காஞ்சிபுரம் மற்றும் இராமநாதபுரம்

6. கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றை கால வரிசைப்படுத்துக:
1. நவஜவான் பாரத் சபா.
2. இந்துஸ்தான் சோஷலிச குடியரசு அமைப்பில் பகத்சிங் சேர்ந்தார்.
3. பகத்சிங் லாகூர் சிறையில் தூக்கிலிடப்பட்டார்.
4. பகத்சிங்கும் பி.கெ.தத்தும் மத்திய சட்டமன்றத்தின் மீது குண்டு வீசினார்கள்
(அ) 1, 3, 4, 2 **(ஆ) 2, 1, 4, 3** (இ) 3, 1, 4, 2 (ஈ) 4, 3, 2, 1

7. "அல் ஹிலால்" என்ற வார செய்தித்தாளை ஆரம்பித்தவர் --------- ஆவார்
(அ) முகமது அலி ஜின்னா (ஆ) ரகமது அலி (இ) முகமது இக்பால் **(ஈ) அபுல் கலாம் ஆசாத்**

8. பின்வருவனவற்றைப் பொருத்துக:
திட்ட காலத்தில் ஊரக நலக் கொள்கைகள்:
(அ) பாரத நிர்மாண் 1. X திட்டம்
(ஆ) ஊரக ஏழைகளின் அடிப்படை தேவைகளை உறுதி செய்தல் 2. XI திட்டம்.
(இ) ஊரக ஏழைகளுக்குப் புதிய ஊதியம் பெறும் வழிகளை ஆக்குதல் 3. IX திட்டம்
(ஈ) ஊரகப் பகுதிகளில் புதிய உள்கட்டமைப்பு வகைகளை உருவாக்குதல் 4. VIII திட்டம்

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ. | 1 | 2 | 3 | 4 |
| **ஆ.** | **2** | **4** | **1** | **3** |
| இ. | 4 | 1 | 2 | 3 |
| ஈ. | 3 | 1 | 2 | 4 |

9. சொத்துக்களுக்கான வரி இந்தியாவில் யாரால் வசூலிக்கப்படுகிறது?
(அ) மைய அரசு (ஆ) மாநில அரசு
(இ) மைய மற்றும் மாநில அரசு **(ஈ) உள்ளாட்சி அரசு**

10. மத்திய அரசால் அல்லது மாநில அரசால் அமைக்கப்பட்ட லாட்டரி சீட்டுகள் மூலம் கிடைக்கும் வரி வருவாய் யாருக்குச் செல்லும்?
**(அ) ஒன்றிய அரசுக்கு** (ஆ) மாநில அரசுக்கு
(இ) மத்திய மற்றும் மாநில அரசுக்கு (ஈ) மேற்கண்ட எதுவும் இல்லை

11. பின்வருபவை வறுமையின் பொருளாதார பிரச்சனையாகும்.
1.அதிகரிக்கும் வேலையின்மை.
2. தொழில்நுட்ப வளர்ச்சி.
3. மூலதனப் பற்றாக்குறை.
4. போதிய பொருளாதார வளர்ச்சியின்மை
(அ) 1, 2 மற்றும் 3 (ஆ) 2.3 மற்றும் 4 **(இ) 1, 3 மற்றும் 4** (ஈ) 1, 2 மற்றும் 4

12. 2022ஆம் ஆண்டிற்கான BRICS மாநாட்டை நடத்தும் நாடு ---------- ஆகும்
(அ) பிரேசில் (ஆ) இரஷ்யா (இ) இந்தியா **(ஈ) சீனா**

13. ஆளுமையை (நபரை) அடையாளம் காண்க:
இவர் தமிழக அரசியல் இயக்கத்தில் பகுத்தறிவு கருத்துக்கள் மற்றும் அறிவியல் பார்வைகளை ஏற்படுத்தியவர்; விவசாயிகள் மற்றும் தொழிலாளர்கள் நலனுக்காக பாடுபட்டவர்; இந்திய அரசியலில் சமதர்ம கருத்துக்களைப் பரப்பியவர்; இந்திய தேசிய காங்கிரஸின் உறுப்பினராகவும் நியமிக்கப்பட்டவர்.
(அ) ஜெ.சி.குமரப்பா (ஆ) ஈ.வே.ரா.பெரியார்
**(இ) சிங்காரவேலர்** (ஈ) மறைமலை அடிகளார்

14. கூற்று (A): இந்திய அரசமைப்பு விதி 312 அகில இந்தியப் பணிகள் தொடர்பானதாகும்.
காரணம் (R): ஒரே சீரான தன்மையுடைய அதிகாரவர்க்கம் இருக்க வேண்டும் என மாநிலங்கள் விரும்பின.
**(அ) கூற்று (A) உண்மையாகும். காரணம் (R) தவறாகும்.**
(ஆ) கூற்று (A) மற்றும் காரணம் (R) ஆகிய இரண்டும் சரியாகும். மேலும் காரணம் (R) என்பது கூற்று (A)விற்கான சரியான விளக்கமாகும்.
(இ) கூற்று (A) தவறு. காரணம் (R) சரியாகும்
(ஈ) கூற்று (A) மற்றும் காரணம் (R) ஆகிய இரண்டும் சரியாகும். இருப்பினும் காரணம் (R) என்பது கூற்று (A)விற்கான சரியான விளக்கம் அல்ல

15. தாடையற்ற முதுகெலும்பிகள் என்பவை யாவை?
(அ) தலை முதுகு பிராணிகள் (ஆ) வால் முதுகு பிராணிகள்
**(இ) வட்டவாயுடைய உயிரிகள்** (ஈ) இருவாழ் உயிரினங்கள்

16. மனித இரத்தத்தில் உட்கரு இல்லாத இணைகளைத் தேர்ந்தெடுக்கவும்.
(அ) நியூட்ரோஃபில்கள் மற்றும் ஈசினோஃபில்கள்
(ஆ) பேசோஃபில்கள் மற்றும் லிம்போசைட்கள்
(இ) மோனோசைட்கள் மற்றும் ஈசினோஃபில்கள்
**(ஈ) முதிர்ச்சி அடைந்த எரித்ரோசைட்டுகள் மற்றும் திராம்போசைட்டுகள்**

17. உயிரி வாயு உற்பத்தியில் படியும் கழிவுகளில் ------- அளவு மிகுந்திருப்பதால் சிறந்த உரமாகும்.
(அ) கார்பன் மற்றும் ஹைட்ரஜன் **(ஆ) நைட்ரஜன் மற்றும் பாஸ்பரஸ்**
(இ) அயோடின் மற்றும் ஆன்டிமனி (ஈ) சோடியம் மற்றும் கால்சியம்

18. 298 K வெப்பநிலையில், 0.08M $CH_3COOH$ மற்றும் 0.06M $CH_3COONa$ கொண்ட கலவையில் உள்ள $H_3O^+$ அயனியின் செறிவினைக் கணக்கிடுக.
(அசிடிக் அமிலத்தின் Ka = $1.84 \times 10^{-5}$)
**(அ) $2.4533 \times 10^{-5}$ mol $l^{-1}$** (ஆ) $2.7613 \times 10^{-5}$ mol $l^{-1}$
(இ) $3.4533 \times 10^{-5}$ $mol^2$ $l^{-2}$ (ஈ) $2.7713 \times 10^{-5}$ mol $l^{-1}$

19. ஓர் எண்ணின் 75% உடன் 75ஐ கூட்டினால் முடிவு அதே எண். அந்த எண்ணைக் கண்டுபிடி.
(அ) 50 (ஆ) 60 **(இ) 300** (ஈ) 400

20. 400இன் 30% மதிப்பின் 25% என்ன?
(அ) 25 **(ஆ) 30** (இ) 120 (ஈ) 150

21. கீழே உள்ளவைகளில், $21x^2y$, $35xy^2$ ஆகியவற்றின் மீ.பொ.வ. காண்க
(அ) 7x (ஆ) 7y (இ) $7x^2y$ **(ஈ) 7xy**

22. $4\sqrt{3}$ செ.மீ ஐ மூலைவிட்டமாகக் கொண்ட கனசதுரத்தின் கனஅளவு என்ன?
(அ) 8 செ.மீ$^3$ (ஆ) 16 செ.மீ$^3$ (இ) 27 செ.மீ$^3$ **(ஈ) 64 செ.மீ$^3$**

23. ஒரு சீரான நாணயம் இரண்டு முறை சுண்டப்படுகிறது. குறைந்தது ஒரு தலை கிடைக்க நிகழ்தகவினைக் காண்க:
(அ) 1/4 (ஆ) 1/2 **(இ) 3/4** (ஈ) 1

24. 32, 36, 45, 60 மற்றும் 80 ஆகிய எண்களால், மீதியின்றி வகுபடும் மிகச் சிறிய எண்
(அ) 1444 **(ஆ) 1440** (இ) 1404 (ஈ) 1430

25. 8 நபர்கள் ஒரு வேலையை 16 நாட்களில் செய்து முடிப்பர். 4 நாட்கள் கழித்து மேலும் 8 நபர்கள் வந்து சேர்கிறார்கள் எனில், அவ்வேலையைச் செய்ய எடுத்துக் கொள்ளும் நாட்கள்
(அ) 4 (ஆ) 6 **(இ) 8** (ஈ) 10

26. ஒரு மகிழுந்து 360 கி.மீ தூரத்தை 4 மணி நேரத்தில் கடக்கின்றது. அதே வேகத்தில் மகிழுந்து செல்லும் பொழுது 6 மணி 30 நிமிடங்களில் எவ்வளவு தூரத்தைக் கடக்கும் எனக் காண்க:
(அ) 400 கி.மீ **(ஆ) 585 கி.மீ** (இ) 600 கி.மீ (ஈ) 636 கி.மீ

27. ஒரு நீர்த்தொட்டியை 6 குழாய்களைக் கொண்டு நிரப்பினால் 1 மணி 20 நிமிடத்தில் அத்தொட்டி நிரம்பும் எனில் 5 குழாய்களைக் கொண்டு நிரப்பினால் எவ்வளவு நேரத்தில் அத்தொட்டி நிரம்பும்?
**(அ) 96 நிமிடங்கள்** (ஆ) 98 நிமிடங்கள் (இ) 94 நிமிடங்கள் (ஈ) 92 நிமிடங்கள்

28. A ஒரு வேலையை 10 நாட்களிலும் B அதே வேலையை 15 நாட்களிலும் முடிப்பர். இருவரும் சேர்ந்து அவ்வேலையை செய்து ரூ.1, 500ஐ ஈட்டினர், எனில் அத்தொகையை எவ்வாறு பிரித்து கொள்வர்?
(அ) ரூ.800, ரூ.700 **(ஆ) ரூ.900, ரூ.600** (இ) ரூ.850, ரூ.650 (ஈ) ரூ.950, ரூ.550

29. 15968ஐ எந்த எண்ணால் வகுக்கும் போது ஈவு 89 மற்றும் மீதி 37 கிடைக்கும்?
(அ) 169 **(ஆ) 179** (இ) 181 (ஈ) 189

30. ஒரு குறிப்பிட்ட தொகையானது 10 ஆண்டுகளில் இரட்டிப்பு ஆகிறது எனில் அதன் வட்டி வீதம்
(அ) 5% **(ஆ) 10%** (இ) 15% (ஈ) 20%

131. ரூ.450 க்கு ஆண்டிற்கு 4.5% வட்டி வீதத்தில், தனிவட்டி முறையில், எத்தனை ஆண்டுகளில் ரூ.81 வட்டியாக கிடைக்கும்?
(இ) 3.5 ஆண்டுகள் **(ஆ) 4 ஆண்டுகள்** (இ) 4.5 ஆண்டுகள் (ஈ) 5 ஆண்டுகள்

32. கூற்று (A): இந்திய மக்களாகிய நாங்கள் இந்தியாவை ஒரு இறையாண்மை கொண்ட சமதர்ம, மதசார்பற்ற, ஜனநாயக, குடியரசாக அமைவதற்கு, உறுதியுடன் தீர்மானித்துள்ளோம்.
காரணம் (R): முகவுரை இந்திய அரசியல் சாசனத்தின் அதிகார மூலதனம் மற்றும் இந்திய நாட்டின் தன்மையை வெளிப்படுத்துகிறது.
(அ) (A) சரி ஆனால் (R) தவறு
**(ஆ) (A) மற்றும் (R) ஆகிய இரண்டும் சரி (R) என்பது (A)யின் சரியான விளக்கம்**
(இ) (A) தவறு ஆனால் (R) சரி
(ஈ) (A) மற்றும் (R) ஆகிய இரண்டும் சரியானது ஆனால் (R)க்கு சரியான விளக்கம் (A) இல்லை

33. கூற்று (A): அரசு நெறிமுறையுறுத்தும் கோட்பாடுகள் இந்திய "அரசியலமைப்பின் புதுமையான சிறப்பம்சம்" என B.R.அம்பேத்கரால் விவரிக்கப்படுகிறது.
காரணம் (R): அரசு நெறிமுறையுறுத்தும் கோட்பாடுகள் நாட்டிற்கான வழிகாட்டியாக செயல்படுகிறது.
(அ) (A) சரி ஆனால் (R) தவறு
**(ஆ) (A) மற்றும் (R) ஆகிய இரண்டும் சரி (R) என்பது (A)யின் சரியான விளக்கம்**
(இ) (A) தவறு ஆனால் (R) சரி
(ஈ) (A) மற்றும் (R) ஆகிய இரண்டும் சரியானது ஆனால் (R)க்கு சரியான விளக்கம் (A) இல்லை

34. இந்தியாவின் மிகப்பெரிய உயர் நீதிமன்றம் எது?
(அ) கல்கத்தா உயர் நீதிமன்றம் (ஆ) சென்னை உயர் நீதிமன்றம்
**(இ) அலகாபாத் உயர் நீதிமன்றம்** (ஈ) டெல்லி உயர் நீதிமன்றம்

35. பொருத்துக:

| நாடுகள் | நாடாளுமன்றத்தின் பெயர் |
|---|---|
| அ. அமெரிக்க ஐக்கிய நாடுகள் | 1. டயட் |
| ஆ. ஜப்பான் | 2. பாராளுமன்றம் |
| இ. பிரிட்டன் | 3. போல்கட்டிங் |
| ஈ. டென்மார்க் | 4. காங்கிரஸ் |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ. | 2 | 1 | 3 | 4 |
| **ஆ.** | **4** | **1** | **2** | **3** |
| இ. | 2 | 3 | 4 | 1 |
| ஈ. | 4 | 3 | 2 | 1 |

36. அகழ்வாராய்ச்சி செய்யப்பட்ட பொருட்களைத் தொடர்புடைய இடங்களுடன் சரியாகப் பொருத்தவும்:

| | |
|---|---|
| அ. தாமிரம் | 1. கெத்ரி. |
| ஆ. தங்கம் | 2. கோலார். |
| இ. மணிக்கல் | 3. பாதகூன். |
| ஈ. துணி | 4. உம்மா |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ. | 3 | 4 | 1 | 2 |
| **ஆ.** | **1** | **2** | **3** | **4** |
| இ. | 4 | 2 | 1 | 3 |
| ஈ. | 1 | 4 | 3 | 2 |

37. முகலாயர் காலத்தில் வங்கிப் பணிகள் பெரும்பாலும் ஷ்ராஃப்கள், சாஹீகர்கள் மற்றும் மகாஜன்களால் செய்யப்பட்டன என்று எந்தக் குறிப்புக் கூறுகிறது?
(அ) தஸ்கிராய்–உல்–வாகியாத் ஜௌஹறின் (ஆ) கேசவ் தாஸின் ரசிக் பிரியா
(இ) அபுல் ஃபஸ்லின் ஐன்–ஐ–அக்பரி **(ஈ) சுஜான் ராயின் குலாசத்–உல்–த்வரிக்**

38. ராஷ்டிரகூட அரசர்களில் தலைசிறந்தவர்
**(அ) முதலாம் அமோகவர்ஷர்** (ஆ) இரண்டாம் கிருஷ்ணர்

(இ) மூன்றாம் இந்திரர் (ஈ) இரண்டாம் கோவிந்தர்

39. 2011ஆம் ஆண்டின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி இந்தியாவின் மொத்த மக்கள் தொகையில் பழங்குடி மக்கள் மட்டும் ------ சதவீதம் உள்ளனர்.

(அ) 6.3% (ஆ) 7.4% (இ) 8.2% **(ஈ) 8.6%**

40. சரியான கூற்றைத் தேர்வு செய்க:

1. சமயக் சார்பின்மை என்பது இந்திய அரசியலமைப்பின் ஒரு அங்கமாகும்.
2. ஒரு சமயம் சார்ந்த குழு மற்றொரு குழுவின் மீது ஆதிக்கம் செலுத்துதல்.
3. எந்த சமயத்தையும் பின்பற்ற அரசு அனுமதியளித்தல்.
4. சமய விவகாரங்களில் அரசு நடுநிலைமை கொண்டிருத்தல்

(அ) 1, 2 மட்டும் (ஆ) 2, 3 மட்டும் (இ) 4 மட்டும் **(ஈ) 1, 3 மற்றும் 4 மட்டும்**

41. பட்டியல் I–ஐ பட்டியல் II–உடன் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு விடையைத் தேர்ந்தெடு:

| பட்டியல் – I கணவாய் | பட்டியல் – II இரண்டு இடங்களை இணைக்கிறது |
|---|---|
| அ. நிட்டி கணவாய் | 1. கார்கிலுடன் காஷ்மீர் |
| ஆ. பென்சிலா கணவாய் | 2. திபெத்துடன் உத்தரகண்ட் |
| இ. புர்சைல் கணவாய் | 3. லடாக்குடன் சீனா |
| ஈ. ரோஹ்தாங் கணவாய் | 4. ஸ்பிட்டியுடன் லாஹூல் |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| **அ.** | **2** | **1** | **3** | **4** |
| ஆ. | 2 | 3 | 4 | 1 |
| இ. | 2 | 3 | 1 | 4 |
| ஈ. | 2 | 1 | 4 | 3 |

42. இந்தியாவில் விரைவு அஞ்சல் சேவை எந்த ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது?

(அ) 1955 (ஆ) 1965 **(இ) 1975** (ஈ) 1985

43. இந்தியாவில் அதிக மற்றும் குறைந்த மக்களடர்த்தி கொண்ட யூனியன் பிரதேசங்கள் யாவை?

(அ) புதுடெல்லி, புதுச்சேரி **(ஆ) புதுடெல்லி, அந்தமான் நிக்கோபார் தீவுகள்**

(இ) புதுடெல்லி, கோவா (ஈ) புதுடெல்லி, ஏனாம்

44. பின்வருவனவற்றில் எது தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது?

1. SBSE – மாநில பள்ளிக் கல்வி வாரியம்.
2. BHSE – உயர் மதிப்பெண் தேர்வு வாரியம்.
3. TNBSE – தமிழ்நாடு பள்ளிக் கல்வி வாரியம்.
4. TNBHSE – தமிழ்நாடு மேல்நிலைக் கல்வி வாரியம்

(அ) 1 மற்றும் 2 சரியானது அல்ல **(ஆ) 2 மற்றும் 3 சரியானது அல்ல**

(இ) 3 மற்றும் 4 சரியானது அல்ல (ஈ) 1 மற்றும் 3 சரியானது அல்ல

45. வனவிலங்குகள் பாதுகாப்புச் சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு

(அ) 1974 (ஆ) 1980 **(இ) 1972** (ஈ) 2002

46. மத நல்லிணக்கத்தை மேம்படுத்தும் வகையில் சிறந்த சேவையாற்றிய ஒருவருக்கு தமிழ்நாடு அரசு வழங்கும் விருது

(அ) திருவள்ளுவர் விருது **(ஆ) கோட்டை அமீர் மத நல்லிண விருது**

(இ) பேரறிஞர் அண்ணா விருது (ஈ) பாவேந்தர் பாரதிதாசன் விருது

47. பின்வரும் கூற்றுள் குடிமக்கள் யார் என்பதில் தவறான கூற்றைக் காட்டுக:

1. குடிமக்கள் முழு சிவில் உரிமைகளை அனுபவிக்கிறார்கள். 2. அரசியல் சமூகத்தின் உறுப்பினர்கள். 3. குடிமக்கள் அரசியல் உரிமைகளை அனுபவிப்பதில்லை.

(அ) 1 மற்றும் 2 (ஆ) 1 மட்டும் (இ) 2 மட்டும் **(ஈ) 3 மட்டும்**

48. அமிழ்தத்தை விட இனிமையானது என்று வள்ளுவர் எதனைச் சுட்டுகின்றார்?

(அ) மக்கள் மெய் தீண்டல் **(ஆ) தம் மக்கள் சிறு கை அளாவிய கூழ்**

(இ) புல்லாங்குழலின் இனிமை (ஈ) காதலி இன் "சொல்"

49. "நவில் தொறும் நூல் நயம் போலும் பயில்தொறும் தொடர்பு" யாருடைய தொடர்பு இன்பம் தரும்?"

(அ) பேதையார் தொடர்பு (ஆ) அரிவையர் தொடர்பு

**(இ) பண்புடையாளர் தொடர்பு** (ஈ) அறிவுடையவர் தொடர்பு

50. தேசிய மனித உரிமைகள் ஆணையம் நிறுவப்பட்ட ஆண்டு

(அ) 1990 (ஆ) 1978 (இ) 1979 **(ஈ) 1993**

51. சரியான இணையைத் தேர்வு செய்க:

**அ. கண்ணாடி மணிகள் – பொருந்தல்.**

ஆ. உடைந்த சங்கு வளையல் – கீழடி.

3. உருக்கு உலை – கொடுமணல்.

4. ஒரே மரத்தாலான படகின் பகுதி – புதுச்சேரியின் ஆரோவில்

52. சரியான விடையைத் தெரிவு செய்க:

1. சிவகங்கையின் "இராணி" வேலு நாச்சியார் ஆவார்.

2. காளையர் கோவில் போரில் கொல்லப்பட்ட முத்து வடுகநாதர் இராணி வேலு நாச்சியாரின் கணவராவார்.

3. வேலு நாச்சியாரின் நம்பிக்கைக்குரிய படைத் தளபதி குயிலி இவர் முதல் தற்கொலைப் படைவீரர் ஆவார்.

4. மருது சகோதரர்களின் உதவியுடன் வேலு நாச்சியார் மீண்டும் இராணியாக முடி சூட்டிக் கொண்டார்.

(அ) 1, 2 மற்றும் 4 சரி (ஆ) 1, 3 மற்றும் 4 சரி (இ) 2 மற்றும் 3 சரி **(ஈ) அனைத்தும் சரி**

53. ---- தன்னுடைய அன்பையும் இரக்கத்தையும் செடி கொடிகள் உட்பட அனைத்து உயிரினங்களிடத்திலும் காட்டியவர்.

**(அ) இராமலிங்க அடிகள்** (ஆ) அயோத்திதாசர் (இ) பாபா ராம்சிங் (ஈ) குருநானக்

54. சரியான கூற்றைத் தேர்வு செய்க.

1. பேரியார் ஈ.வெ.இராமசாமி சுய மரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்தார்.

2. மக்கள் அவரை "பெரியார் அவரை "வைக்கம் வீரர்" என பாராட்டினர்.

3. பெரியார் "சித்திர புத்திரன்" எனும் புனை பெயரில் கட்டுரைகளை எழுதினார்.

4. B.R.அம்பேத்கார் அவர்களின் ஒடுக்கப்பட்ட மக்களுக்கான தனித்தேர்தல் தொகுதிக் கோரிக்கையை பெரியாரும் ஆதரித்தார்

(அ) 1 மற்றும் 4 சரி (ஆ) 2 மற்றும் 3 சரி **(இ) 1, 2 மற்றும் 4 சரி** (ஈ) 2 சரி

55. இந்தியாவில் பிரிட்டிஷ் காலனி ஆதிக்கத்தை எதிர்த்துப் போரிட்ட முதல் பெண்ணரசி

(அ) குயிலி **(ஆ) வேலு நாச்சியார்** (இ) ராணி மங்கம்மாள் (ஈ) இராணி இலட்சுமி பாய்

56. கூற்று (A) : சாதி ஒழிப்பு பற்றி அம்பேத்கர் எழுதியுள்ளார்.

காரணம் (R): இந்து சமய நூல்களில் இருந்த சாதி முறையை விமர்சனம் செய்தார்.

**(அ) கூற்று (A) மற்றும் காரணம் (R) இரண்டும் சரி, மற்றும் காரணம் (R) கூற்றின் (A) சரியான விளக்கமாகும்.**

(ஆ) கூற்று (A) மற்றும் காரணம் (R) இரண்டும் சரி, ஆனால் காரணம் (R) கூற்றின் (A) சரியான விளக்கமல்ல

(இ) கூற்று (A) சரி, காரணம் (R) தவறு

(ஈ) கூற்று (A) தவறு, காரணம் (R) சரி

57. 1952இல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் காமராசர் தேர்ந்தெடுக்கப்பட்ட தொகுதி --------- ஆகும்.

(அ) நாகர்கோவில் (ஆ) விருதுநகர் **(இ) ஸ்ரீவில்லிப்புத்தூர்** (ஈ) அருப்புக்கோட்டை

58. பின்வருவனவற்றுள் எது நேருவின் குடும்பப் பெயர் ஆகும்?
(அ) ராய் (ஆ) குல் (இ) சர்கார் **(ஈ) கௌல்**

59. 'இலக்க முறை பொருளாதாரத்தில் இந்தியா ஓர் உலகளாவிய போட்டியாளராகும்" எனக் கூறியவர்
(அ) அமர்த்தியாசென் (ஆ) மன்மோகன் சிங் **(இ) சுந்தர் பிச்சை** (ஈ) ஜவஹர்லால் நேரு

60. சரியான இணையைத் தேர்ந்தெடுக்கவும்:

| | | |
|---|---|---|
| 1. முதல் ஐந்தாண்டு திட்டம் | – | 1950–1955 |
| 2. மூன்றாவது ஐந்தாண்டு திட்டம் | – | 1966–1969 |
| 3. ஒன்பதாவது ஐந்தாண்டு திட்டம் | – | 1997–2002 |
| 4. பன்னிரெண்டாவது ஐந்தாண்டு திட்டம் | – | 2012–2017 |

(அ) 1 மற்றும் 2 சரி **(ஆ) 3 மற்றும் 4 சரி** (இ) 1 மற்றும் 3 சரி (ஈ) 1 மற்றும் 4 சரி

61. கூற்று (A): சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகளை வைத்து வங்கி இணைப்புத் திட்டத்தில் சேர்க்கப்படுகிறார்கள்.
காரணம் (R): இத்திட்டத்தின் முக்கிய நோக்கமானது பயனாளிகளை வறுமைக் கோட்டிற்கு மேல் முன்னேற்றமடையச் செய்வதாகும்.
(அ) (A) சரி ஆனால் (R) தவறு
**(ஆ) (A) மற்றும் (R) இரண்டும் சரி (R) என்பது (A)விற்கான சரியான விளக்கமாகும்**
(இ) (A) தவறு, மற்றும் (R) சரி
(ஈ) (A) மற்றும் (R) இரண்டும் சரி ஆனால் (R) என்பது (A)விற்கான சரியான விளக்கமல்ல

62. 2022இல் ASEAN கூட்டத்தை எந்த நாடு நடத்துகிறது?
**(அ) கம்போடியா** (ஆ) இத்தாலி (இ) உரோம் (ஈ) இலங்கை

63. உலக் அழகி பட்டத்தினை 2021இல் வென்றவர் யார்?
**(அ) ஹர்னாஸ் சந்து** (ஆ) நாடியா ஃபெரேரியா (இ) லாரா தத்தா (ஈ) நந்திதா பன்னா

64. பொருத்துக:

| அரசியல் கட்சி | 16வது சட்டமன்றத்தில் அதன் பலம் |
|---|---|
| அ. பாட்டாளி மக்கள் கட்சி | 1. 18 |
| ஆ. விடுதலை சிறுத்தைகள் கட்சி | 2. 2 |
| இ. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி | 3. 4 |
| ஈ. இந்திய தேசிய காங்கிரஸ் | 4. 5 |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ. | 3 | 2 | 4 | 1 |
| ஆ. | 4 | 2 | 3 | 1 |
| **இ.** | **4** | **3** | **2** | **1** |
| ஈ. | 2 | 3 | 4 | 1 |

65. தூய்மை சக்தி ஆராய்ச்சி முயற்சி (CERI)யின் குறிக்கோள்
(அ) புதுமைகளை வளர்ப்பது **(ஆ) மலிவாகவும் அணுகக்கூடியதாகவும் பெறப்படுவது**
(இ) ஆராய்ச்சியின் மூலம் வளர்ப்பது (ஈ) மேற்குறிப்பிட்டுள்ள அனைத்தும்

66. நவம்பர் 28, 2021 அன்று, 7.5 ரிக்டர் அளவு கொண்ட ஒரு மாபெரும் நிலநடுக்கம் ஏற்பட்ட இடம்
(அ) இந்தோனேஷியா **(ஆ) பெரு** (இ) பாகிஸ்தான் (ஈ) நியூசிலாந்து

67. கீழ்க்கண்டவற்றில் எந்த தாவரம் வேர் ஒட்டுண்ணி தாவரமாகும்?
(அ) விஸ்கம் (ஆ) கஸ்கூட்டா (இ) லோரான்தஸ் **(ஈ) ராப்ளசியா**

68. பின்வரும் வினாக்களை கீழ்க்கண்ட குறிப்புகள் மூலம் விடையளிக்கவும்:
கூற்று (A): அசிட்டிக் அமிலம் வலிமை குறைந்த அமிலம்.
காரணம்(R): அசிட்டிக் அமிலத்தில் நான்கு ஹைட்ரஜன் அணுக்கள் இருந்தாலும், ஒரே ஒரு ஹைட்ரஜனை மட்டுமே இடப்பெயர்ச்சி செய்ய முடியும்.
(அ) கூற்று (A) சரி காரணம் (R) தவறு
**(ஆ) கூற்றும் (A) காரணமும் (R) சரி, ஆனால் காரணம் (R) கூற்று (A) விவரிக்கவில்லை**
(இ) கூற்று (A) தவறு காரணம் (R) சரி
(ஈ) கூற்றும் (A) காரணமும் (R) சரி. காரணம் (R) கூற்றை (A) நன்கு விளக்குகிறது

69. F என்ற விசை t என்ற சால அளவில் ஒரு பொருளின் மீது செயல்பட்டால் ஏற்படும் மதிப்பு, விசை மற்றும் கால அளவின் பெருக்கற்பலனுக்கு சமமாக இருக்கும். இதனை ------ என்பர்
(அ) நிலைமம் (ஆ) உந்து விசை **(இ) கணத்தாக்கு** (ஈ) நேரியல் உந்தம்

70. இவற்றுள் எது பாகுமை விசையின் அலகு கிடையாது?
**(அ) நியூட்டன்** (ஆ) பாய்ஸ் (இ) $Kgm^{-1}s^{-1}$ (ஈ) $Nsm^{-2}$

71. கீழ்காண்பவற்றுள் எந்தப் பொருளின் அடர்த்தி மிகுதியானது?
(அ) காற்று **(ஆ) நீர்** (இ) மண்ணெண்ணெய் (ஈ) மரம்

72. $x^2-2xy+y2$ மற்றும் $x^4-y^4$ ஆகியவற்றின் மீப்பெரு பொது வகுத்தி காண்க:
(அ) 1 (ஆ) x+y **(இ) x–y** (ஈ) $x^2-y^2$

73. (–5, 0), (0, –5) மற்றும் (5, 0) ஆகிய புள்ளிகளால் அமைக்கப்படும் முக்கோணத்தின் பரப்பு காண்க:
(அ) 0 ச.அலகுகள் **(ஆ) 25 ச.அலகுகள்** (இ) 5 ச.அலகுகள் (ஈ) 125 ச.அலகுகள்

74. ஒரு வட்ட வடிவப் பூங்காவின் சுற்றளவு 352 மீ, பூங்காவின் பரப்பளவு காண்க:
(அ) 8956 மீ$^2$ (ஆ) 448 மீ$^2$ (இ) 1452 மீ$^2$ **(ஈ) 9856 மீ$^2$**

75. ஒரு மரம் வெட்டுபவர்க்கு ஒரு மரத்துண்டை 3 துண்டுகளாக்குவதற்கு 12 நிமிடங்கள் ஆகும் எனில் அதனை 5 துண்டுகளாக்க எவ்வளவு நேரம் தேவை?
(அ) 12 நிமிடம் **(ஆ) 24 நிமிடம்** (இ) 30 நிமிடம் (ஈ) 36 நிமிடம்

76. 12, 16, 24 மற்றும் 36ஆல் வகுபடும்போது ஒவ்வொரு முறையும் 7ஐ மீதியாக தரக்கூடிய மிகச்சிறிய மதிப்புடைய எண் ------- ஆகும்.
**(அ) 151** (ஆ) 51 (இ) 36 (ஈ) 144

77. 382 என்பது 238 எனவும் 473 என்பது 347, ........ எனவும் எழுதப்பட்டால், பின்வரும் இரு எண்களில் எந்த இரு எண்களின் வித்தியாசம், மிகக் குறைவானதாக இருக்கும்
(அ) 473, 382 (ஆ) 629, 728 (இ) 629, 568 **(ஈ) 728, 847**

78. REDன் குறியீடு 6720 எனில் GREENன் குறியீடு
(அ) 1677199 **(ஆ) 1677209** (இ) 16717209 (ஈ) 9207716

79. ABCD : OPQR : : WXYZ : ?
(அ) EFGH **(ஆ) KLMN** (இ) QRST (ஈ) STUV

80. இரண்டு இலக்கங்களைக் கொண்ட ஓர் எண்ணின் இலக்ககங்களின் கூடுதல் 9. ஆந்த எண்ணிலிருந்து 27ஐக் கழிக்க அவ்வெண்களின் இலக்கங்கள் இடம் மாறிவிடும். ஏனில், அவ்வெண்ணைக் காண்க:
(அ) 36 (ஆ) 45 (இ) 54 **(ஈ) 63**

81. சுருக்குக: 20 + [8x2+ {6x3−10÷5}]
(அ) 40 (ஆ) 57 **(இ) 52** (ஈ) 48

82. ரூ.640 ஆனது இரண்டு ஆண்டுகளில் கூட்டுத்தொகை ரூ.774.40 ஆகும். எனில் கூட்டு வட்டி விகிதம் காண்:
(அ) 10% (ஆ) 12% (இ) 12.5% (ஈ) 14%

83. ஓர் இரு சக்கர வாகனத்தின் விலை 2 ஆண்டுகளுக்கு முன் ரூ.1, 00, 000 ஆக இருந்தது. அதன் மதிப்பு ஆண்டுதோறும் 5% வீதம் குறைகிறது எனில் அதன் தற்போதைய மதிப்பு
(அ) ரூ.80, 000 (ஆ) ரூ.80, 250 **(இ) ரூ.90, 250** (ஈ) ரூ.95, 000

84. "சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்" என்ற முழக்கங்கள் இந்திய அரசியலமைப்பின் முகவுரையில் முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது. இவை எந்த புரட்சியின் முழக்கங்கள்?
(அ) அமெரிக்கப் புரட்சி **(ஆ) பிரெஞ்சுப் புரட்சி** (இ) ரஷ்யப் புரட்சி (ஈ) சீனப் புரட்சி

85. கூற்று (A): அமைச்சர்கள் குழு ஒட்டு மொத்தமாக மக்களவைக்கு பொறுப்புடையவர்கள்.
காரணம் (R): அமைச்சர்களை பிரதமரின் ஆலோசனையின் பேரில் குடியரசு தலைவர் நியமிக்கிறார்.
(அ) (A) சரி ஆனால் (R) தவறு (ஆ) (A) மற்றும் (R) சரி (A) க்கான சரியான விளக்கம் (R) ஆகும்
(இ) (A) தவறு, (R) சரி **(ஈ) (A) மற்றும் (R) சரி (A)க்கான சரியான விளக்கம் (R) ஆகாது**

86. பின்வருவனவற்றுள் எது அரசியல் அமைப்பின் பாதுகாவலனாகக் கருதப்படுகின்றது?
(அ) சட்டமன்றம் (ஆ) ஆட்சித்துறை (இ) அமைச்சரவை **(ஈ) உச்ச நீதிமன்றம்**

87. கீழ்காண்பவற்றை அதன் தோற்றுவிக்கப்பட்ட ஆண்டின் அடிப்படையில் சரியாக கால வரிசைப்படுத்தவும்:
1. மத்திய கண்காணிப்பு ஆணையம்.
2. மத்திய புலனாய்வு குழு.
3. மத்திய தகவல் ஆணையம்.
4. லோக்பால் மற்றும் லோக் ஆயுக்தா சட்டம்
(அ) 1, 3, 2, 4 (ஆ) 2, 4, 3, 1 **(இ) 2, 1, 3, 4** (ஈ) 3, 2, 1, 4

88. சிந்து சமவெளி நாகரீகத்தின் வடக்கோர குடியிருப்பு எது?
(அ) சுட்காஜென்டோர் **(ஆ) ஷோர்டுகை** (இ) ஆலம்கிர்பூர் (ஈ) டைமாபாத்

89. சமுத்திரகுப்தர் காலத்தைச் சாராதவர்
(அ) புஷ்யவர்மன் **(ஆ) பாஸ்கர்வர்மன்** (இ) விஷ்ணுகோபா (ஈ) ஸ்ரீ மேகவர்மன்

90. சரியானக் கூற்றை தேர்வு செய்க:
1. இந்தியப் பாரம்பரியம் விருந்தோம்பல், ஈகை, நட்பு, அன்பு, ஒழுக்கம், உண்மை, ஆகியவற்றைக் கொண்டது.
2. அஜந்தா மற்றும் எல்லோரா ஓவியங்கள் உலகப் புகழ் பெற்றவை.
3. சமணர்கள் புத்த பூர்ணிமாவை கொண்டாடுகின்றனர்.
4. புரத நாட்டியம், குச்சுப்புடி, கதக்களி, மணிப்புரி மற்றும் ஒடிசி போன்றவை இந்தியாவின் புகழ் பெற்ற நடனக்கலைகளாகும்.
(அ) 1 மற்றும் 2 சரி (ஆ) 4 மட்டும் சரி (இ) 3 மட்டும் சரி **(ஈ) 1, 2 மற்றும் 4 ஆகியவை சரி**

91. கூற்று (A): இமயமலை ஒரு இளம் மடிப்பு மலையாகும்.
காரணம்(R): இமயமலை சில மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர்தான் புவிமேலோட்டு பேரியக்க விசைகள் காரணமாக உருவாகியது.
(அ) (A)சரி (R) தவறு (ஆ) (A) தவறு (R) சரி
**(இ) (A), (R) ஆகிய இரண்டும் சரி** (ஈ) (A), (R) ஆகிய இரண்டும் தவறு

92. கங்கை நதியின் வலது கரையின் துணை நதி
(அ) ராம் கங்கா (ஆ) மனாஸ் (இ) கோசி **(ஈ) யமுனா**

93. கீழ்க்கண்ட ஆறுகளை அவற்றின் துணையாறுகளுடன் பொருத்தவும்:

| | |
|---|---|
| அ. சிந்து நதி | 1. கோமதி. |
| ஆ. கங்கை நதி | 2. இந்திராவதி. |
| இ. பிரம்மபுத்திரா நதி | 3. சீனாப். |
| 4. கோதாவரி நதி | 4. சுபன்ஸ்ரீ |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ. | 3 | 1 | 2 | 4 |
| ஆ. | 2 | 4 | 3 | 1 |
| **இ.** | **2** | **4** | **1** | **3** |
| ஈ. | 4 | 2 | 3 | 1 |

94. கீழ்க்கண்டவற்றைப் பொருத்துக:

| அமைப்புகளின் பெயர்கள் | அமைவிடம் |
|---|---|
| அ. அரசு மருத்துவக் கல்லூரி | 1. தென் சென்னை |
| ஆ. புற்றுநோய்க்கான சிறப்பு மையம், அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவமனை | 2. கே.கே.நகர், சென்னை. |
| இ. மறுவாழ்வு சிறப்பு மருத்துவ நிறுவன மையம் | 3. காஞ்சிபுரம். |
| ஈ. பல்நோக்கு சிறப்பு மருத்துவமனை | 4. திருவள்ளுர் |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ. | 1 | 3 | 4 | 2 |
| ஆ. | 3 | 4 | 2 | 1 |
| **இ.** | **4** | **3** | **2** | **1** |
| ஈ. | 3 | 4 | 1 | 2 |

95. தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்தின் (TNAU) கீழ் செயல்பட்டு வரும் தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிறுவனம் (TRRI) எங்கு உள்ளது?

**(அ) தஞ்சாவூர்** (ஆ) திண்டுக்கல் (இ) சேலம் (ஈ) திருநெல்வேலி

96. தாமிரபரணி என்பது --------- உச்சியில் மேற்கு தொடர்ச்சி மலையில் உருவாகும் ஒரு வற்றாத நதியாகும்.

**(அ) அகஸ்தியர் கூடத்தில் பொதிகை மலை** (ஆ) சிவஞான தீர்த்தம்

(இ) வருசநாடு மலைகள் (ஈ) தென்பெண்ணை

97. மனித வாழ்க்கைக்குரிய பழியென்று வள்ளுவர் எதனைக் குறிப்பிடுகின்றார்?

(அ) நிலையற்ற வாழ்வு (ஆ) மக்கட்பேறு இல்லாத வாழ்வு

**(இ) புகழற்ற வாழ்வு** (ஈ) அன்பற்ற வாழ்வு

98. ஆள்வோரின் செல்வத்தைத் தேய்க்கும் படை எது?

(அ) கொடியோரை ஒறுத்தல் (ஆ) ஒல்லாது வானம் பெயல்

(இ) புகழ்ந்தாருக்குக் கொடுக்கப்படும் பரிசு **(ஈ) ஆற்றாது அழுத கண்ணீர்**

99. திருநங்கை நலவாரியம் பின்வருவனவற்றுள் எந்தத் துறையின் கீழ் செயல்படுகிறது?

(அ) சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை (ஆ) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

(இ) மாற்றுத்திறனாளிகள் நலத்துறை **(ஈ) சமூக நலன் மற்றும் மகளிர் மேம்பாட்டுத்துறை**

100. "இவறலும் மாண்பிறந்த மானமும் மாணா
உவகையும் ஏதம் இறைக்கு"
இக்குறளில் குறிப்பிடும் "இறை" என்பதன் பொருள்

(அ) இறைவன் **(ஆ) அரசன்** (இ) உயர்ந்தவன் (ஈ) மேன்மக்கள்

winmeen.com